வாணியம்பாடி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.ப. சதீஷ்குமார், B.Pharm.,

ந.க.எண்: 2227 /2023 /எப் 1 நாள் 27.08.2024

பொருள் : மனைப்பிரிவு – வாணியம்பாடி நகராட்சி – சர்வே. வார்டு B, பிளாக் 18, நகரளவு எண்.2/3B2, 2/7– இல் 7580.50 (அ) 0.75.80.5 ஹெக்டர் பரப்பளவிலான மனைப் பிரிவு வரைபடம் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது – நகர ஊரமைப்பு துறையின் ந.க.எண். HV3CEPQ7/2023/2023/TCP–இன் படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ,நாள் 04.08.2019 .

2.அரசாணை எண்:81 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(1)), நாள் 09.12.2020 .

3.அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (UD4(1)), நாள் 16.07.2022 .

4.பொது உபயோக இடத்திற்கான தான பத்திரம் பதிவு எண் 8899/2023, நாள்: 20.11.2023

5. உதவி இயக்குநர் , மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, திருப்பத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்: HV3CEPQ7/2023/2023/TCP நாள் , . 28.11.2023

6. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை , அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 12843/2022டிபி 2 நாள் 20.10.2022.

7.நகராட்சி பொறியாளர் அவர்களின் மனைப்பிரிவு அடிப்படை வசதிகள் குறித்த நேராய்வு குறிப்பு நாள் : 01.08.2024

8. துறைத்தலைவர் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியல் துறை , பிரியதர்ஷினி பொறியியல்

கல்லூரி அவர்களின் 08.08.2024 தேதிய ஆய்வு சான்று அறிக்கை .

9.வாணியம்பாடி நகரமன்ற தீர்மான எண்:209 நாள் : 16.08.2024

10.மனைப்பிரிவு பராமரிப்பு , மனை உட்பிரிவு , மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணங்கள் செலுத்திய ரசீது 034/VN4/4/24 –25/0004510, 034/VN4/4/24–25/0004511, 034/VN4/4/24–25/0004512 , நாள் : 23.08.2024

*****

உத்தரவு

வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியபேட்டை பகுதியில் 7580.50(அ)0.75.80.5 பரப்பளவிலான குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 5 இல் காணும்

உதவி இயக்குனர், நகர்ஊரமைப்பு துறை ,திருப்பத்தூர் அவர்களால் இம்மனை பிரிவிற்கு ந.க.எண்: HV3CEPQ7/2023/2023/TCP எண்ணில் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனை பிரிவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி பணிகள் குறித்து பார்வை 7 இல் கண்டுள்ள நகராட்சி பொறியாளர் அவர்களின் 01.08.2024 தேதிய மனைப்பிரிவு அடிப்படை வசதிகள் குறித்த நேராய்வு குறிப்பில் சாலைகள், மழைநீர் வடிகால்கள் ,குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பு, தெரு விளக்குகள் போன்றவை மனைப்பிரிவு உரிமையாளரால் முறையாக அமைக்கப்பட்டுள்ளதாக நகராட்சி பொறியாளர் குறிப்பு வழங்கியுள்ளார்.

மேற்காணும் அரசாணை எண்: 141 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.7.2022ன் படியும் பார்வை – 6 இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குனர் சுற்றறிக்கை ந.க. எண்: 12843 /2022 டிபி 2 நாள் 20.10.2022 வழிகாட்டு நடைமுறை எண் 5,6,7 இன் படி இப் பணிகளை மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் மூன்றாம் நபர் வாயிலாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது இதன் அடிப்படையில் வாணியம்பாடி நகராட்சி அருகாமையில் உள்ள பிரியதர்ஷினி பொறியியல் கல்லூரி மூன்றாம் நபர் ஆய்வு குறித்த சான்று அறிக்கை மற்றும் சான்றுடன் சமர்ப்பிக்க இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதன் படி , பார்வை 8 இல் கண்டுள்ள பிரியதர்ஷினி கல்லூரியின் 08.08.2024 தேதிய சான்று பெறப்பட்டுள்ளது.

எனவே பார்வை 1 இல் கண்டுள்ள அரசாணையின்படி பார்வை 4 இல் கண்டுள்ள நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள், பொது உபயோக இடம் மற்றும் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடம் தான பத்திரம் ஆவண எண்: 8899/2023 நாள்:20.11.2023 நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 4 இல் கண்டுள்ள மேற்படி மனைப்பிரிவு சாலை, பொது உபயோக இடத்தினை நகராட்சி பராமரிப்புக்கு ஏற்று பார்வை 9 இல் கண்டுள்ள வாணியம்பாடி நகர மன்ற தீர்மான எண்: 209, நாள்: 16.08.2024 மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைகளுக்காக நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட வேண்டிய, கூராய்வு கட்டணம் ரூபாய் 11,370/- , OSR கட்டணம் ரூபாய் 31,28,378/-, செண்டேஜ் கட்டணம் ரூபாய் 12000/-மற்றும் அறிவிப்பு கட்டணம் ரூபாய் 10000/-ஆகிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு துறை ,உதவி இயக்குநர் ,திருப்பத்தூர் அவர்களின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது .

உதவி இயக்குனர், மாவட்ட நகர்ஊரமைப்பு துறை, திருப்பத்தூர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் 34 குடியிருப்பு மனைகளுக்கு காலி மனை வரிவிதிப்பு எண்கள் 034/002/900519 முதல் 034/002/900552 வரையிலான வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு அதற்கான காலி மனை வரி கட்டணம் ரூ.35,176/- , 24.07.2024-ஆம் தேதியில் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மனைப்பிரிவு உட்பிரிவு கட்டணமாக ரூபாய் 34,000/- செலான் எண்: 034/VN4/4/24-25/0004510 நாள் : 23.08.2024 , மனை பராமரிப்பு பணிகளுக்கான வைப்புத் தொகையாக ரூபாய். 2,00,000/- செலான் எண்: 034/VN4/4/24-25/0004511 நாள் : 23.08.2024 மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணம் 20,000/- செலான் எண்: 034/VN4/4/24-25/0004512 நாள் : 23.08.2024 . மேலும் , அபிவிருத்தி கட்டணமாக ரூபாய் 98,560 /- மற்றும் கூராய்வு கட்டணமாக ரூபாய் 2,000/- ஆக மொத்தம் ரூபாய் 1,00,560/- செலான் எண்: 034/VN4/4/24-25/0004510, நாள் : 23.08.2024, தேதியில் இவ்வலுவலக கருவூலத்தில் செலுத்தப்பட்டு பார்வை 10 இல் காணும் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி கருவூலத்தில் செலுத்திய ரசீது நகல் பெறப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருப்பத்தூர் அவர்களின் ந.க.எண்: HV3CEPQ7/2023/2023/TCP எண்ணில் நாள்: 28.11.2023 தொழில்நுட்ப வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டதின் அடிப்படையிலும்,
2. இந்த அனுமதிக்குட்பட்ட இடத்தில் அல்லது எல்லையின் விஸ்தீரன எல்லைக்குள் வழக்கு ஏதேனும் இருப்பது தெரிய வந்தால் அதற்கு உட்படுத்தி இந்த அனுமதி உத்திரவு ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD4(1)), நாள் 16.07.2022-இல் தெரிவித்துள்ளவாறு சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தியடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு தங்களை சார்ந்ததாகும்.

ஆணையாளர்

வாணியம்பாடி நகராட்சி

27/8/2024

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைப்படம்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல்:

1. திரு. ஆனந்தராமன்
   1/94, மார்கசகாய தெரு,
   தேவஸ்தானம், வாணியம்பாடி தாலுக்கா,
   வாணியம்பாடி.
2. திரு. ஆதித்யன்
   3/A, ராஜவீதி,
   ராமநாயக்கன்பேட்டை,
   வாணியம்பாடி தாலுக்கா,
   வாணியம்பாடி.

நகல்:

1. பொறியாளர், வாணியம்பாடி நகராட்சி.
2. உதவி வருவாய் அலுவலர், வாணியம்பாடி நகராட்சி. – காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டதற்கு தொடர்ந்து வரி வசூல் செய்ய.
3. நகரமைப்பு ஆய்வாளர், வாணியம்பாடி நகராட்சி.
4. சார் பதிவாளர், வாணியம்பாடி. – பத்திர பதிவுகளுக்காக.